# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் சுவிட்சர்லாந்திலுள்ள பள்ளிவாயிலில் 23.04.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நான் பெரும்பாலும் மக்களுக்கு கவனமூட்டி வரும் விஷயம் அல்லாஹ்வுக்கு நனறியுள்ள அடியாராக இருங்கள் என்பதுதான். உண்மையான நன்றியுடைமை உருவாக நமது உள்ளத்தில் தக்வா இருக்க வேண்டும். நமது பிறப்பின் நோக்கத்தைப் புரிந்து அதனை பெற முயற்சி செய்யவும் வேண்டும். இந்த சுற்றுப் பயணத்தில் நான் ஐரோப்பாவின் பல நாடுகளுக்கு சென்றேன். கடந்த சில குத்பாக்களில் குறிப்பாக இதன் பக்கம் கவனமூட்டினேன்.

அல்லாஹ் M.T.A. மூலம் நமக்கு பேரருள் செய்துள்ளான். நமது குத்பாக்கள் தொடர்ந்து அதன் மூலம் வெளிவருகின்றன. மேலும் நமது ஆன்மீக முன்னேற்றத்திற்கு தேவையான இன்னும் பல நிகழ்ச்சிகளும் அதில் வருகின்றன. அவ்வாறிருந்தும் நூறு சதவிகித ஜமாஅத் மக்கள் அதிலிருந்து பயனடைவதில்லை. கணிசமான மக்கள் ஆண், பெண், இளைஞர், முதியவர் குத்பாவைக் கூட தொடர்ந்து பார்ப்பதில்லை. அவ்வாறு கேட்பவர்களுள் சிலர், எங்கு குத்பா உரை நிகழ்த்தப்படுகிறதோ அங்குள்ள மக்களுக்காகவே உரையாற்றப்படுவதாக கருதிவிடுகின்றனர். எனவே ஒவ்வொரு குத்பாவும் ஒவ்வொரு அஹ்மதிக்காகவும்தான் கொடுக்கப்படுகிறது. உலகின் எப்பகுதியில் வாழ்ந்து வந்தாலும் சரி குறிப்பாக பழைய அஹ்மதிகள் சிலரிடம் இந்த தவறான எண்ணம் உருவாகியுள்ளது. சந்திக்கும் போது அரபு நாட்டிலிருந்து வந்துள்ள சில புதிய அஹ்மதிகள் கேட்கின்றனர்; எழுதவும் செய்கின்றனர். சில குத்பாக்களை கேட்கும் போது இது எங்களைப் பற்றிதான் கூறுகின்றீர்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. சில காலமாக ரஷ்ய மொழியிலும் குத்பா மொழியாக்கத்துடன் ஒளிபரப்பப்படுகிறது. ரஷ்யாவின் பல்வேறு பகுதியில் வாழும் அஹ்மதிகளிடமிருந்து பெருமளவில் கடிதங்கள் வரத் தொடங்கியுள்ளன. குத்பாக்கள் நம்மிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. சில தர்பிய்யத் வழங்கும் குத்பாக்களை கேட்கும் போது எங்களது நிலைகளைப் பார்த்து நீங்கள் கொடுக்கிறீர்கள் என்று எழுதுகின்றனர். திருமண சடங்குகளைக் குறித்து நான் குத்பா கொடுத்ததும் இந்த சடங்குகளில் நாங்கள் சிக்கித் தவித்துக் கொண்டுதான் இருந்தோம். எங்களது தர்பிய்யத்தில் வளர்ச்சி ஏற்பட குத்பாக்கள் வழி வகுத்தன என்று கடிதம் எழுதுகின்றனர்.

கலீஃபாவின் குரலைக் கேட்க வேண்டும். அதனை அமல் செய்ய முயற்சி செய்ய வேண்டும் என்று நினைக்கின்ற அஹ்மதிகள் தமது சீர்திருத்தத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஆர்வத்தோடு அம்மக்கள் குத்பாவை கேட்பதுடன் அந்த குத்பா தமக்காக கொடுக்கப்பட்டதுதான் என்று கருதுகின்றனர். ஆனால் ஏற்கனவே கூறியது போன்று சிலர் குத்பாவைக் கேட்பதும் இல்லை. இந்த குத்பா தமக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது என்று உணர்வதும் இல்லை. அல்லது ஏதோ ஒரு சம்பிரதாயமாக உட்கார்ந்து கேட்கின்றனர். எனவே ஒவ்வொரு நாட்டிலும் எனது குத்பாவில் மீண்டும் மீண்டும் சில விஷயங்களைக் கூறுகிறேன். ஜுமுஆவுக்கு வருகின்ற ஒவ்வொரு அஹ்மதியின் உள்ளத்திலும் பொதுவான பலவீனங்கள் இருந்த போதிலும் கூட காலத்தின் கலீஃபாவின் சுற்றுப்பயணம், குத்பாக்கள், ஜல்ஸா நிகழ்ச்சிகளில் புதிய வேகத்துடன் வருகின்றனர். அது குத்பாவாக இருப்பினும், மற்ற நிகழ்ச்சிகளாக இருப்பினும் சரி. எனவே நான் சுவிட்சர்லாந்தின் அஹ்மதிகளிடம் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். முதல் விஷயம் நான் ஆரம்பத்தில் கூறியது போன்று நன்றியுள்ள அடியாராக மாறுங்கள். குறிப்பாக ஐரோப்பவில் வாழும் அஹ்மதிகளாகிய உங்களுக்கு சுவிட்சர்லாந்தில் வாழச் செய்து மன நிம்மதிமிக்க திருப்தியான பொருளாதார நிலையுடன் வாழ்வை அல்லாஹ் தந்துள்ளான். அதற்காக மிகவும் நன்றி உடையவராக இருக்க வேண்டும். அல்லாஹ் நன்றியுடைமை குறித்து திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் கூறியுள்ளான்.

இறைவன் கூறுகின்றான்: நீங்கள் நன்றி செலுத்துபவர்களாக விளங்கினால், நான் உங்களுக்கு மேலும் அதிகமாக வழங்குவேன். (14:8)

எனவே இங்கு அல்லாஹ் தனது அருள்களுக்கு நன்றி செலுத்துவது பற்றி கூறியுள்ளான். அல்லது அல்லாஹ்வுடைய அருள்களை வெளிப்படுத்துவது பற்றி கூறியுள்ளான். அல்லாஹ்வுடைய அருள்களுக்கு நன்றி செலுத்துவது, இறை அருளை வெளிப்படுத்துவது என்றால் என்ன? அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவது என்றால் அவனுக்கு முழுமையாக கட்டுப்படுவதாகும். அவனது கட்டளைகளைப் பேணுதல் ஆகும். அவன் கட்டளையிட்டவற்றை முழுமையான கவனத்துடன் நிறைவேற்ற வேண்டும். முழுமையான கட்டுப்படுதலைக் காட்டியவாறு அவன் தடுத்தவற்றை விட்டு விலக வேண்டும்.

ஒரு உண்மையான முஃமினின் வேலை அவர் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாக விரும்பினால் நன்றி செலுத்தும் அடியாராகவே தமது வாழ்வை மாற்றிவிட வேண்டும். நன்றியுள்ள அடியார் ஆவதற்கு அவர் உட்காரும்போதும், எழும் போதும் அல்லாஹ்வின் அருட்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ்வின் அருட்களை நினைத்து அவன் திக்ரினால் நாவை நனைத்துக் கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வின் அருள்களை நினைத்து எப்போதும் அவனை புகழ்ந்து கொண்டிருக்க வேண்டும். அல்லாஹ்வுடைய புகழ்ச்சி நாவில் தொடர்ந்து கொண்டிருக்க வேண்டும். நாவினால் மட்டும் செய்தால் போதாது. அவரது ஒவ்வொரு அசைவிலும் அமைதியிலும் தமது ஒவ்வொரு உறுப்பிலிருந்தும் இறைவனது ஹம்து (புகழ்தல்) வெளிப்பட வேண்டும். அல்லாஹ்வுடைய ஓர் எளிய அடியாராவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த எளிமை கிடைப்பதற்கு உண்மையில் எல்லா நிஃமத்துகளையும் தருபவன் இறைவனேயாவன் என்பதை உணர வேண்டும். அல்லாஹ்வின் அன்பு உள்ளத்தில் இருக்க வேண்டும். அவன் கொடுத்த நிஃமத்துகளை அவனது போதனைக்கு ஏற்ப பயன்படுத்த வேண்டும். ஆரோக்கியமான உடலை வழங்கியுள்ளான். இபாதத் மற்றும் மார்க்க சேவை மூலம் அதற்கு நன்றி செலுத்த வேண்டும். வசதிவாய்ப்புகளை வழங்கியுள்ளான். எந்தவித பெருமை, இறுமாப்பும் இன்றி அவன் வழியில் செலவழிக்க வேண்டும். அல்லாஹ் தந்த திறன்கள், வாய்ப்புகள், செல்வங்கள், சந்ததிகள் அனைத்தையும் அல்லாஹ்வின் போதனையின்படி பயன்படுத்துவது நன்றியுடைமையாகும். பிறகு இறைவன் தனது அடியாரின் மீது மிகவும் கருணை காட்டுபவன் ஆவான். ஒன்றுக்கு பதில் பன்மடங்கு அதிகமாக தருபவனும், அவன் அம்மனிதனின் தகுதியையும் உயர்த்துகின்றான். ஆரோக்கியத்தையும் தருகின்றான். வசதிகளை தருகின்றான். பணிவுமிக்க அடியாருக்கு தனது நெருக்கத்தையும் வழங்குகின்றான். அவர் பிறந்த நோக்கத்தை அடையவும் தவ்ஃபீக்கையும் வழங்குகின்றான். அல்லாஹ்வுடைய அருளின்றி தனது திறமையினால் மட்டும் மனிதனால் இபாதத் கூட செய்ய முடியாது. அதாவது ஒப்புக் கொள்ளப்பட்ட இபாதத் எதுவும் மனிதனால் செய்ய முடியாது. இபாதத் செய்தாலும் அவனது அருளின்றி ஒப்புக்கொள்ளத்தக்கதாக இருக்காது; அது பயனற்றது. எனவே நன்றி செலுத்துதல் என்ற கருத்துதான் மனிதனை நன்மையில் வளர்ச்சி காண வைக்கிறது. தக்வாவில் வளர்ச்சி அடைய வாய்ப்பினை தருகிறது. ஒவ்வொரு சொல்லையும் செயலையும் அல்லாஹ்வுடைய அருளின் விளைவாக கருதி அவன் பக்கம் குனிகின்றான். பிறகு அத்தகைய அடியானின் பக்கம் அல்லாஹ்வும் கவனம் செலுத்துகிறான்.

அல்லாஹ் ஓரிடத்தில் கூறுகின்றான்: அவர்கள் செய்யும் நன்மைகளில் எதுவும் மதிக்கப்படாமல் இருப்பதில்லை. மேலும் அல்லாஹ் இறையச்சமுடையோரை நன்கு அறிகிறான். (3:116)

தக்வாவும் கூட நன்றி செலுத்துவதினால் அதிகரிக்கின்றது. நன்றி செலுத்துவதும் ஒரு நற்செயல் ஆகும். உண்மையான நன்மை செய்யும் வாய்ப்பு கூட அல்லாஹ் வழங்கியதாகும் என்று ஒருவன் சுட்டிக் காட்டும் போதுதான் கிடைக்கிறது. நன்மையில் வளர்ச்சியடையக்கூடிய நன்றி செலுத்தும் அடியார்களுக்காக இறைவன் தானே நன்றி உடையவன் என்பதற்கான ஆதாரத்தை வழங்குகிறான். இதனை தெளிவுபடுத்தியவாறு இறைவன் கூறுகிறான்.

ஏனெனில் இதன் விளைவாக அவன் அவர்களுக்கு அவர்களுக்குரிய நற்பலனை முழுமையாக வழங்குவான். மேலும் தன் அருளிலிருந்து இன்னும் மிகுதியாக அவர்களுக்கு வழங்குவான். நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவனும், மதிப்பளிப்பவனுமாவான். (35:31)

அல்லாஹ் தனக்காகவும் ஷுகூர் – நன்றியுடையவன் என்ற சொல்லை பயன்படுத்துகிறான். அடியார்களின் எளிமையான நன்றியுடைமையல்ல. மாறாக அல்லாஹ்வே எல்லா ஆற்றல்களின் எஜமானன். அவன் நன்றி செலுத்துகிறான் எனில் அதன் பொருள் அல்லாஹ் தனது அடியார்களின் எளிமை, நன்றியுடைமை, நன்மைகளில் முன்னேறுதல் ஆகியவற்றை விரும்புகிறான். களங்கமற்ற முறையில் செய்யப்படுகின்ற இறைவணக்கங்கள் அல்லாஹ்வுடைய அருளை ஈர்க்கின்றன. எனவே இவ்வசனத்தில் அல்லாஹ் கபூர் என்ற சொல்லுடன் **ஷகூர்** (நன்றி அறிபவன்) என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளான். அவன் மன்னிப்பவனும், நன்மைகளுக்கு மதிப்பளிப்பவனும் ஆவான்.

மனிதன் பலவீனமானவன் ஆவான். ஒவ்வொரு நன்மையையும் நான் அல்லாஹ்வுக்காகவே செய்ய வேண்டும் என்று அவனுக்கு உணர்வு ஏற்படும் போது, அவனுக்கு நன்றியுடைய அடியார் ஆக வேண்டும் என்ற உணர்வு ஏற்படும் போது களங்கமற்ற முறையில் அவன் பக்கம் குனிய வேண்டும். அந்த நிலையில் அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும் இருப்பான். அவனது ரஹ்மத் மிகவும் பரந்தது. தனது மன்னிப்பு என்ற போர்வையால் தனது அடியானை மூடி விடுகின்றான். அவனது பாவங்களை திரையிட்டு மறைக்கின்றான். தன் பக்கம் எடுத்து வைக்கப்படுகின்ற அடியானின் ஒவ்வோர் அடிக்கும் மிகவும் மதிப்பளிக்கின்றான். தனது வெகுமதிகளை அவனுக்கு அதிகரித்துக் கொண்டே செல்கிறான். இதுவே நமது இறைவன் ஆவான். எல்லா அடிப்படையிலும் தமது அடியானுக்கு அருள்புரிகின்றான். அவருக்கு உலகமும் கிடைக்கிறது. அவரது நன்மைகளுக்கு கூலியும் கிடைக்கிறது. அத்தகைய கருணையுடன் அடியானின் நன்மைகளை பொருட்படுத்துகின்ற இறைவனை விட்டு விட்டு அடியான் முகம் திருப்பிச் சென்றால் அந்த மனிதன் துர்பேறுள்ள அறிவற்றவர் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்?

எனவே நீங்கள் இந்த நாட்டில் வந்து குடியேறி உள்ளீர்கள. உங்களை ஆய்வு செயது பாருங்கள். உங்கள் கடந்த காலத்தைப் பாருங்கள். உங்களில் பெரும்பாலார் இறைவன் நம்மீது அருள் புரிந்துள்ளான் என்ற பதிலைத்தான் தர முடியும். சொந்த நாட்டில் இருந்து ஒருவர் காரணமில்லாமல் வெளியேறுவதில்லை. (i) அவர் அநியாயக்காரர்களால் வெளியேற்றப்படுகிறார். அல்லது (ii) தொல்லைகள் தாங்க முடியாமல் வெளியேறுகிறார். அல்லது (iii) வருமானம் தேடி வெளியேறுகிறார். அஹ்மதிகள தம்மை ஆய்வு செய்து பார்த்தால் நான் கூறிய மூன்று வி-யத்தில் முதல் நிலை முழுமையாக உங்களுக்குப் பொருந்தாது. அடுத்த இருநிலைகள் அவர்களுக்கு பொருந்துகின்றன. அநீதியால் தொல்லை தரப்பட்டால் மன நிம்மதி இழந்தும் வருமானத்திற்காக நாட்டை விட்டு வெளியேறிய போது இந்த (ஐரோப்பிய) நாடுகள் உங்களின் நிலைமைகளை புரிந்து கொண்டு இங்கு தங்குவதற்கு அனுமதியளித்தன. இந்த அனைத்து அருள்களையும் அல்லாஹ் நம்மீது அஹ்மதிய்யத்தின் காரணத்தால் செய்தான். பிறகு அஹ்மதிய்யத்துடன் ஒருடல் போன்று இணைந்து விடுங்கள். பிறகு அல்லாஹ்வுடைய அருள்களுக்கு நன்றி செலுத்தியவராவீர்கள். ஜமாஅத்திற்கு கண்ணியம் அளிக்கவில்லை எனில் காலத்தின் கலீஃபாவின் வார்த்தைகளுக்கு செவிசாய்க்கவில்லையெனில் சிறிது சிறிதாக நீங்கள் இறை அருளை விட்டு விலகி விடுவது மட்டுமின்றி உங்கள் சந்ததிகளையும் மார்க்கத்தை விட்டு விலக்கி விடுவீர்கள்.

எனவே சிந்தியுங்கள். உலகம் உங்களை மார்க்கத்தை விட்டு வெளியே கொண்டு செல்கிறது எனில் அது வெகுமதியல்ல. மாறாக, அழிவாகும். அல்லாஹ்வின் அருட்களை மறுப்பதற்கு சமமாகும். அல்லாஹ்வுடைய நிஃமத்துகளை மதிக்காத நிலையாகும். நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். நாம் காலத்தின் இமாமிடம் பைஅத் செய்துள்ளோம். அவரது வருகையை எல்லா சமுதாயமும் எதிர்பார்த்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரது வருகையைப் பற்றி மிகவும் அன்புமிக்க

சொற்களை பயன்படுத்தியுள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்), அவர்களுக்காக சலாம் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய மனிதருடன் சேர்ந்திருப்பது என்ன சாதாரண விஷயமா நிச்சயமாக அது மாபெரும் கண்ணியமாகும். இது ஓர் அஹ்மதிக்கு கிடைத்துள்ளது. இந்த கண்ணியத்திற்கு மதிப்பளிப்பது ஓர் அஹ்மதியின் கடமையாகும்.

இந்த மதிப்பளிக்கும் செயல் மற்றும் அம்மனிதனை நன்றி செலுத்தும் அடியானாக்குகிறது. பிறகு இறைவனது அருள் அவன் மீது இன்னும் அதிகமாக இறங்கக் காண்பார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தன்னை இணைத்திருப்பதாக கூறுவது வெறும் வார்த்தையல்ல. மாறாக அது பைஅத் உறுதிமொழியாகும். அன்னாருக்கு நீங்கள் இந்த வாக்குறுதி அளித்துள்ளீர்கள். அன்னாருக்குப் பிறகு அவர்களின் கலீஃபாவிடம் நீங்கள் பைஅத் செய்துள்ளீர்கள். இந்த பைஅத்தின் கருத்தை ஒவ்வொரு அஹ்மதியும் புரிவது அவசியமாகும். பைஅத் என்றால் விற்று விடுவதன் பெயராகும். உங்கள் விருப்பங்கள், உணர்வுகள் அனைத்தையும் இக்கட்டளைகளுக்கு முன் அர்ப்பணிப்பதாகவும் அதற்கேற்ப உங்கள் வாழ்வை அர்ப்பணிப்பதாகவும் நீங்கள் செய்யும் ஓர் உடன்படிக்கையாகும். உங்கள் விருப்பத்தை முற்றிலும் அழித்து விடுவதன் பெயராகும்.

இறைவனை முன்னிறுத்தி செய்யும் உடன்படிக்கையாகும். இறைவனை சந்திக்கும் நாளைப் பற்றி உறுதியிருக்கும் என்றால் அன்று ஒவ்வொரு உறுதிமொழி பற்றியும் கேட்கப்படும் என்று உறுதி இருக்கும் என்றால் மனிதன் பயத்தால் மெய்சிலிரித்து விடுகின்றான். என்னென்ன விஷயங்கள் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் வாக்குறுதி வழங்கியுள்ளார்கள் என்பது பற்றி சில விஷயங்களை சுருக்கமாக வைக்கிறேன். ஒவ்வொருவரும் தாமே ஆய்வு செய்து பார்க்கட்டும். தமது வாழ்வை அதற்கேற்ப அவர் நடத்துகிறாரா? நடத்த முயற்சியாவது செய்கிறாரா? முயற்சிகூட செய்யவில்லை எனில், **உடன்படிக்கைகளை நிறைவேற்றுங்கள். ஒவ்வொரு உடன்படிக்கை குறித்தும் கேட்கப்படும் (17:35)** என்ற வழிகாட்டலுக்கு ஏற்ப நமது கடைசி நிலை குறித்து கவலைப்பட வேண்டும். இந்த தற்காலிக வாழ்வுக்குப் பிறகு மறுவுலக நிரந்தரமான வாழ்வு ஆரம்பமாக உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் வாக்குறுதி வாங்கியுள்ளார்கள். அதுபற்றி நான் சுருக்கமாக கூறுகிறேன்:

அன்னார் கூறுகின்றார்கள்: உண்மையான உள்ளத்துடன் எல்லா விதமான ஷிர்க்கிலிருந்தும் விலகுவதற்கு உறுதி எடுங்கள். ஷிர்க்கைப் பற்றி விளக்கமாக அன்னார் இன்னோர் இடத்தில் கூறுகின்றார்கள். ஷிர்க் என்றால் வெளிப்படையான சிலைகள், கற்களை வணங்கும் ஷிர்க் மட்டும் அல்ல. மாறாக மறைமுகமான ஷிர்க்கும் உள்ளது. உங்கள் பணிகளுக்காக தொழுகைகளை பலியாக்குவதும் ஷிர்க் ஆகும். தொழுகையிலிருந்து கவனமற்று இருப்பது இரு மடங்கு பாவமாகும். ஒன்று, தனது பிறப்பின் நோக்கத்திலிருந்து அவனை அகற்றி விடுகிறது. ஏனெனில் இறைவன் கூறுகிறான். **நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் (51:57)** என்று கூறியுள்ளான்.

இரண்டாவது பாவம் உலகத்திற்கு முன்னுரிமை வழங்குகிறீர்கள். உணவளிப்பவன் இறைவன் அல்ல; மாறாக உங்கள் முயற்சிகள், தொழில்கள், வேலைகள் என்று கருதுகிறீர்கள். சில வேளை சந்ததிகள் கூட இறைகட்டளைக்கு எதிரில் தடையாக நிற்கின்றன. அதுவும் ஷிர்க்கின் ஒருவகையாகும். அல்லாஹ்வுடைய தெளிவான கட்டளைக்கு மாறு செய்வதும் ஒருவகையான மறைமுக ஷிர்க் ஆகும். சில வேளையில் இவை இறை நினைவையே மறக்கடித்து விடுகிறது. பலர் இவ்வாறு சந்ததிகளின் காரணமாக அஹ்மதிய்யத்தை விட்டு விலகியுள்ளார்கள். சந்ததிகளின் மீது கொண்ட அளவற்ற அன்பு, வரம்பில்லாத சுதந்திரம் சந்ததிகளை மார்க்கத்தை விட்டு விலக்கியது. பிறகு பெற்றோரும் சேர்ந்து மார்க்கத்தை விட்டு விலகி விடுகின்றனர்.

**அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வை நினைவு கூருவதை விட்டும் உங்கள் செல்வமும் உங்கள் குழந்தைகளும் உங்கள் கவனத்தைத் திருப்பிவிட வேண்டாம். (63:10)**

எப்போதாவது அல்லாஹ்வுக்கு எதிரில் மற்றவை நம்மிடம் முக்கியத்துவம் பெறும் எனில் அவனது திக்ர், அவனை இபாதத் செய்தல் ஆகியவற்றிலிருந்து கவனமற்றவராக்கும் எனில் நீங்கள் மற்றவற்றிற்கு முதன்மை வழங்குகின்றீர்கள் எனில் இது சாதாரண கவனமின்மை அல்ல. அழிவைத் தரும் கவனமின்மையாகும். எனவே இதில் முஃமின்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்துள்ளான். நம்மிடம் உடன்படிக்கை செய்தது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தது மட்டுமே போதுமானது என்று கருத வேண்டாம். மாறாக ஒவ்வொரு வினாடியும் இறைவனின் நினைவில் உள்ளத்தையும் மூளையையும் புத்துணர்ச்சியுடன் வைக்க வேண்டியுள்ளது. அதன் மூலம் ஒவ்வொருவகை ஷிர்க்கிலிருந்தும் விலக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு அஹ்மதியிடமும் எதிர்பார்ப்பு வைத்துள்ளார்கள். ஓர் அஹ்மதி எல்லா வகையான விபச்சாரம், தீய பார்வை, விவாதம், அநீதியிழைத்தல், நம்பிக்கை துரோகம், சண்டை சச்சரவு, குழப்பம், பகைமை ஆகியவற்றிலிருந்து தப்பிக்க வேண்டும். எப்போதும் ஆய்வு செய்ய வேண்டும். நான் இந்த தீமையிலிருந்து தப்பித்துள்ளேனா என்று பார்க்க வேண்டும். தமது தொழில்களில் பொய் கூறுகின்றனர். பொய் ஒரு சாதாரண விஷயம் என்று கருதுகின்றனர். ஆனால் அதனையும் ஷிர்க்குக்கு சமமாக அல்லாஹ் கூறியுள்ளான்.

விபச்சாரம், தீய பார்வை இரண்டும் இக்காலத்து மீடியாக்கள் மூலமாக சாதாரணமாகி விட்டது. தொலைக்காட்சி, இன்டர்நெட் மூலமாக நிகழ்ச்சிகள், வீணான படங்கள் காட்டப்படுகின்றன. குறிப்பாக இளைஞர்களை தீமைகளில் சிக்க வைக்கின்றன. குறிப்பாக இளைஞர்கள், இளம்பெண்கள் இதில் சிக்கியுள்ளனர். சில அஹ்மதி வீடுகளில் கூட இந்த தீமை காணப்படுகிறது. முதலில் இந்த படங்கள் பரந்த சிந்தனையை உருவாக்க வேண்டும் என்பதற்காகவும் காட்டப்பட்டன. பிறகு காட்டப்பப்பட்ட அனைத்தும் செயல்ரீதியாக செய்து காட்டப்பட்டது. கண்ணுக்கும் காதுக்கும் கூட விபச்சாரம் உள்ளது. அதனை தொடர்ந்து செய்யும் போது நேரடியாக விபச்சாரம் செய்ய ஆரம்பித்து விடுகின்றனர்.

பெற்றோர் ஆரம்பத்தில் கவனிப்பதில்லை. வெள்ளம் தலைக்கு மேல் போனதும், எமது குழந்தைகள் கெட்டுப் போய் விட்டார்களே என்று புலம்புகின்றனர். அழுகின்றனர். எனவே முதலிலேயே கவனியுங்கள். வீணான நிகழ்ச்சிகள் நடக்கும் போது குழந்தைகளை தொலைக்காட்சிக்கு முன்னால் உட்கார விடாதீர்கள். இன்டர்நெட்டை கண்காணியுங்கள். சில பெற்றோர் அதிகமாக படித்தவர்கள் அல்ல. ஜமாஅத் அமைப்பு இதனை கவனிக்க வேண்டும். லஜ்னா, அன்சாருல்லாஹ், குத்தாமுல் அஹ்மதிய்யா ஆகிய கிளை அமைப்புகள் தத்தமது வட்டத்தில் இந்த தீமையில் இருந்து வெளியேறுவதற்கான நிகழ்ச்சிகள் நடத்துங்கள். இளைஞர்களாகிய ஆண்களையும் பெண்களையும் ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்படுத்துங்கள். கிளை அமைப்புகளுடன் நல்ல ஈர்ப்பு ஏற்பட வேண்டும். எந்த அளவுக்கெனில் மார்க்கம் அவர்களிடம் முதன்மை பெற வேண்டும். இதுபற்றி பெற்றோர்கள், கிளை அமைப்புகள் கூட முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எந்த வகையான பலவீனத்தை பெற்றோர்கள் காட்டினாலும் அது குழந்தைகளை அழித்து விடும். குறிப்பாக வீட்டின் கண்காணிப்பாளராகிய ஆணின் பொறுப்பு தமது சந்ததிகளை நெருப்பில் விழுவதிலிருந்தும் காப்பாற்ற வேண்டும். அந்த நெருப்பிலிருந்து அல்லாஹ் உங்களையும் உங்கள் மூதாதையர்களையும் காப்பாற்றினான். அதேபோன்று தனது அருளால் காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் தவ்ஃபீக் வழங்கினான். அதுபோன்று உங்கள் சந்ததிகளுக்கு ஏற்படவும், உலகம் பீடிக்கப்பட்டுள்ள நிம்மதியின்மையிலிருந்து தப்பிக்கவும் இறைவன் வாய்ப்பளிப்பானாக. குறிப்பாக முஸ்லிம்களுக்கு ஒரு தலைமை கிடைக்க வேண்டும். அவர்களுக்கு வழிகாட்டல் கிடைக்க வேண்டும். ஆனால் அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிந்து காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பினை வழங்கியுள்ளான். கிலாஃபத்துடன் இணைந்திருப்பதால் நன்மையில் நிலைத்திருப்பதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது.

இவையனைத்தும் அல்லாஹ்வின் அருள்கள் ஆகும். இவை நம்மிடம் எதிர்பார்ப்பது என்னவெனில் கவனமூட்டப்படும் போது எல்லா தீமைகளிலிருந்தும் விலகி விடுவதற்கு உறுதி கொண்டவாறு லப்பைக் என்று கூறியவாறு முன் வாருங்கள். நன்மையில் நீங்களும் அடியெடுத்து வையுங்கள். சந்ததிகளையும் அதன்படி வழிநடத்துவதற்கு முயற்சி செய்யுங்கள். இறைவனது வழிகாட்டல்கள் எச்சரிக்கைகளை முன்னிறுத்துங்கள்.

**நம்பிக்கை கொண்டவர்களே! மனிதர்களும், கற்களும் எரிபொருளாக இருக்கக்கூடிய நரகத்திலிருந்து உங்களையும், உங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். (66:7)**

இன்று உலகில் மினுக்கிக் கொண்டிருக்கிற ஆடம்பரங்கள், பல்வேறு தீமைகளை மேற்கத்திய நாடுகள் தீமைகளாகவே கருதப்படுவதில்லை. ஆனால் இஸ்லாமிய போதனைகளின்படி அவை தீமைகளாகும். நல்லொழுக்கத்திலிருந்து தூர எடுத்துச் செல்பவையாகும். இது ஒவ்வொருவரையும் தன்பிடியில் எடுக்க விரும்புகின்றன. நான் ஏற்கனவே கூறியது போன்று பரந்த சிந்தனைகள் என்ற பெயரில் சில தீய காரியங்கள் செய்யப்பட்டன. பிறகு அவையே தீமைகளின் பக்கம் இழுத்துக் கொண்டு செல்கின்றன. அவை பொழுதுபோக்குரியவையோ சுதந்திரமோ அல்ல. மாறாக மகிழ்ச்சி, சுதந்திரம் என்ற பெயரில் நரகத்தின் படுகுழியாகும்.

இறைவன் தனது அடியார்கள் மீது மிகவும் கருணை காட்டுபவனாவான். இது நெருப்பு என்று முஃமின்களுக்கு தெளிவாக கூறிவிட்டான். இதிலிருந்து உங்களையும் உங்கள் குழந்தைகளையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள். இந்த சமூகத்தில் வாழுகின்ற வாலிப வயதை உடைய ஆண்கள், பெண்களிடம் கூறிக் கொள்கிறேன். இதுவே உங்கள் நோக்கம் என்று கருதி இருந்து விடாதீர்கள். கேளிக்கையும், விளையாட்டும்தான நமது வாழ்வின் குறிக்கோள் என்று எண்ணிவிடாதீர்கள். ஓர் அஹ்மதி என்ற முறையில் உங்களுக்கும் மற்றவருக்கும் இடையில் வித்தியாசம் இருக்க வேண்டும். ஒவ்வொரு அஹ்மதியும் எல்லா வகையான அநீதியிலிருந்தும் தப்பிக்க வேண்டும். உங்களுக்குள் அன்பு நேசம் வேண்டும். எல்லா வகையான ஏமாற்றுதல்களிலிருந்தும் தப்பித்து விடுங்கள்.

ஜமாஅத்தின் அமைப்புக்கு கட்டுப்படுங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அழகே ஜமாஅத் அமைப்பு தான். இந்த அழகிய அமைப்பிலிருந்து விலகிவிட்டால் நமக்கும் மற்றவருக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் தொழுகிறீர்கள். மற்றவர்களும் தொழுகிறார்கள். நீங்கள் நோன்பு வைக்கிறீர்கள். மற்றவர்களும் நோன்பு வைக்கின்றார்கள். நீங்கள் ஹஜ்ஜிற்கு போகிறீர்கள். மற்றவர்களும் ஹஜ்ஜிற்கு செல்கின்றனர். சிலர் சதகாவும் தருகின்றனர். பிறகு என்ன வித்தியாசம் உள்ளது. அவர்களுக்கும் உங்களுக்கும் இடையில் தெளிவான வித்தியாசம் ஜமாஅத் அமைப்பு தான். சிலர் கூறுகின்றனர். கிலாஃபத்துடன் நாங்கள் விசுவாசமாகவே இருக்கின்றோம். ஆனால் ஜமாஅத் அமைப்புடன் தான் கருத்து வேறுபாடு உள்ளது.

ஜமாஅத் அமைப்பு கூட ஜமாஅத்தினால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு தான் ஏதாவது ஒரு பொறுப்பாளர் மீது கருத்து வேறுபாடு இருந்தால் காலத்தின் கலீஃபாவிடம் புகார் செய்யலாம். ஆனால் ஜமாஅத் அமைப்புக்கு கட்டுப்படுவதை விட்டு வெளிவர அனுமதியில்லை. இதேபோன்று பொறுப்பாளர்கள் மக்களுக்கு சோதனையாக ஆகிவிட வேண்டாம். உண்மையான பரிவு நன்மையின் விளைவு இருக்க வேண்டும். அடுத்து தமது பைஅத் நிபந்தனைகளில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகையின் பக்கம் கவனமூட்டினார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொழுகையுடன் அல்லாஹ்வை புகழுமாறு கூறியுள்ளார்கள். அவனது கருணைகளை கவனத்தில் கொள்ளுங்கள்.

பைஅத்தின் நான்காவது நிபந்தனை மன எழுச்சியின் காரணத்தால் உங்கள் நாவினாலோ கைகளினாலோ எவருக்கும் துன்பம் கொடுக்காதீர்கள்.

எல்லா நிலைமையிலும் துன்பத்திலும் வசதியாக இருக்கும் போதும் சரி இறைவனோடு விசுவாசமின்மை காட்டக் கூடாது. மாறாக இறைனுடன் உள்ள தொடர்பை வலுவாகிக் கொண்டே செல்ல வேண்டும். இந்த நாட்டுக்கு வந்ததால் அல்லாஹ் உங்களுக்கு வசதிவாய்ப்புகளை வழங்கியுள்ளான். அவனுடைய உண்மையான நன்றி உடைய அடியாராக இருங்கள் என்பதை நான் கூறி வந்துள்ளேன். பொதுவாக கடந்த இரு வருடங்களாக உலகில் நிலவி வரும் பொருளாதாரப் பிரச்சனைகளின் காரணமாக முழு உலகமும் கவலைக்கு ஆளாகியுள்ளது. இந்நிலையிலும் கூட இறைவனின் கையை விட்டு விடக்கூடாது. இதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவாக கூறினார்கள்.

உலகின் சம்பிரதாயங்கள் உலகாதாய ஆசைகளிலிருந்து விலக வேண்டும். அல்லாஹ்வுக்கும் அவனது ரஸூலுக்கும் முழுமையாக கட்டுப்பட வேண்டும். அல்லாஹ் அவனது ரஸூலுக்கு முழுமையாக கட்டுப்படுவதற்கு குர்ஆனைப் படிக்க வேண்டும். கவனம் செலுத்த வேண்டும்; ஆய்வு செய்ய வேண்டும். அதன் மூலம் திருக்குர்ஆனின் கட்டளைகளை புரிந்து கொண்டு அமல் செய்வதன் பக்கம் கவனம் ஏற்படும். பிறகு இன்னொரு நிபந்தனையை இவ்வாறு வைத்துள்ளார்கள். எல்லா விதமான தற்பெருமையிலும் இருந்து விலகி எளிமையை கைக் கொள்ள வேண்டும்.

எட்டாவது நிபந்தனையில் மார்க்கம் மற்றும் மார்க்கத்தின் கண்ணியம் இஸ்லாத்தின மீது கரிசனம் ஆகியவற்றை நமது உயிர், பொருள், கண்ணியம், சந்ததிகள் ஆகியவற்றை விட உயர்வானதாக கருத வேண்டும். இது ஒரு முக்கியமான நிபந்தனையாகும். ஒவ்வோர் அஹ்மதியும் நினைவில் கொள்ள வேண்டும். அவர்கள் அஹ்மதிய்யத்தின் பிரதிநிதிகள், இஸ்லாத்தின் உண்மையான பிம்பம் ஆவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அஹ்மதியல்லாத முஸ்லிம்களின் பார்வை நம்மீது படுகிறது. நாம் இஸ்லாத்தின் உண்மையான செயல்வடிவம் ஆவோம் என்று கூறி வருகிறோம். எனவே இஸ்லாத்தின் உண்மையான கண்ணியத்தை காப்பாற்றும் பொறுப்பு நமக்கு இருக்கிறது. உண்மையான முன்மாதிரி ஆக வேண்டும். நாம் முன்மாதிரியாகும் போது தான் தப்லீக் மைதானத்தில் வெற்றி பெற முடியும். மார்க்கத்தின் கண்ணியம் இஸ்லாத்தின் மீது கரிசனம் ஆகியவற்றை விரும்புவது நாம் இந்த கண்ணியத்தை உலகில் நிலைநாட்ட வேண்டும் என்பதுதான். இன்று எல்லா பக்கமிருந்தும் இஸ்லாத்திற்கு எதிராக ஒன்றுதிரட்டப்படுகின்றது. உண்மையான இஸ்லாத்தின் செயல்வடிவத்தை உலகின் முன் எடுத்து வையுங்கள். இஸ்லாமிய எதிரிகள் இந்த நாடுகளில் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்த ஒரு முறையை கையாளுகிறார்கள். முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் மினாரா கட்டக்கூடாது என்கின்றனர். மினாராவை கட்டாவிட்டால் இவர்களின் கூற்றுப்படி முஸ்லிம்கள் செய்கிற எல்லா குற்றங்களும் முடிவுக்கு வந்துவிடும் என்று கருதுகின்றனர். மினாராவைப் பற்றி தீர்ப்பு ஆகிவிட்டது. ஆனால் எப்போதும் இந்த Issue-வை உயிருடன் வைத்திருங்கள். அவ்வப்போது பத்திரிகைகளில் எழுதுங்கள். கருத்தரங்குகள் நடத்துங்கள். இன்னும் பல வழிகளில் மக்களுக்கு கவனமூட்டி வாருங்கள். இவ்வாறு கவனமூட்டுவதால் எப்படி ஒரு சட்டம் போட்டு மினாரா கட்டக் கூடாது என்றார்களோ அதே போன்று ஒரு சட்டம் கொண்டு வந்து மினரா கட்டலாம் என்று அனுமதிக்கக் கூடும். நிச்சயமாக மினாராவுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இது மிகவும் பின்னால் உருவானதுதான். ஆனால் இஸ்லாத்தின் கண்ணியத்திற்கு விடப்பட்ட சவால் ஆகும். மினாராவின் பெயரால் இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்தப்படுகிறது. எனவே தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உதாரணத்தை உலகில் எடுத்து வையுங்கள். அல்லாஹ்வின் அருளால் 195 நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் பரவியுள்ளது. ஓரிடத்திலாவது (இங்கு சுவிட்சர்லாந்து இருந்தாவது) ஓர் உதாரணம் அஹ்மதிய்யா ஜமாஅத் இவ்வாறு சட்டமீறல் செய்துள்ளது என்று காட்டுங்கள் பார்ப்போம். சட்டத்திற்கு முழுமையாக கட்டுப்படுகின்றது. நாட்டின் சட்டதிட்டங்களுக்கு எதிராக ஏதாவது ஒரு குழப்பத்தில் ஜமாஅத் ஈடுபட்டதாக காட்ட முடியுமா? அல்லது நாட்டுக்கு எதிராக ஏதாவது விஷமத்தில் ஈடுபட்டதாக காட்ட முடியுமா?

நாமே இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை எடுத்துக் காட்டுகிறோம். தனிப்பட்ட தொடர்புகளையும் கூட விரிவுபடுத்துங்கள். உங்கள் வீடுகளில் அமர்ந்து கொண்டு உங்கள் சுற்றுச் சூழலிலே இருந்து விடாதீர்கள். நன்றாக இந்நாட்டின் மொழி தெரிந்தவர்கள் அருகிலுள்ள கண்ணியமான மக்களிடம் தொடர்பு கொண்டு தப்லீக் மைதானத்தை விரிவுபடுத்துங்கள். சரியாக இவர்களின் மொழியை பேச முடியாது எனில் எழுத்து வடிவில் கொண்டு வந்து Literature –களை கொடுங்கள். எவ்வாறிருப்பினும் ஜமாஅத்தின் ஒவ்வொருவரும் இந்த வேலையை செய்ய வேண்டும். அப்போது சிறிய எண்ணிக்கையில் உள்ள நீங்கள் மிகுந்த தாக்கம் தரும் வேலைகளை செய்ய முடியும். ஏனெனில் இஸ்லாத்தின் சரியான வடிவத்தை எடுத்து வைத்தல், தப்லீக் களத்தில் மார்க்கத்தின் கண்ணியத்தை எடுத்து வைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். நாம் தொடர்ந்து நமது எண்ணிக்கையில் வளர்ச்சி பெறுவதற்கும் முயற்சி செய்யவில்லை எனில் மார்க்க கண்ணியத்தை நிலைநாட்டவும் மார்க்கத்தின் கரிசனம் உள்ளவரின் கடமையை நிறைவேற்றியவராக மாட்டோம். அதற்கு முயற்சி செய்தவர்கள் என்று கூட கூற முடியாது.

அதேபோன்று இன்று இஸ்லாத்திற்கு அவப்பெயர் ஏற்படுத்துவதற்காக ஒரு பிரச்சனை எழுப்பப்படுகிறது. இஸ்லாத்தின் பர்தா பற்றி ஆட்சேபனை செய்யப்படுகிறது. நமது பெண்களின் வேலை பத்திரிகைகளில் பர்தாவின் முக்கியத்துவம் குறித்து கட்டுரைகள் எழுத வேண்டும். பிரிட்டனிலும் ஜெர்மனியிலும் பெண்கள் நல்ல வேலை செய்துள்ளார்கள். பர்தா பெண்களின் கண்ணியத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. எல்லா மார்க்கத்திலும் பெண்களின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக ஏதோ ஒரு வடிவத்தில் இருந்தது. பிறகு வந்தவர்கள் அதனை மாற்றி விட்டனர். கடந்த காலத்தில் கிறித்தவர்களின் பெண்களின் மீது சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதாக சர்ச்சைகள் எழுந்தன. ஆக பெண்களுக்கு ஒரு கண்ணியத்திற்காகவே பர்தா தேவைப்பட்டது. பெண்களின் இயல்பு ஒரு கண்ணியத்தை விரும்புகிறது. ஒவ்வொருவரும் கண்ணியத்தை விரும்புகின்றனர். ஆனால் பெண்களின் ஸ்தானம் ஒரு கண்ணியத்தை விரும்புகிறது. இஸ்லாம் பெண்களின் இந்த கண்ணியம், மரியாதையைப் பெரிதும் மதிக்கிறது. எனவே பெண்களை திரையிட்டு வைக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படவில்லை. மாறாக பெண்களின் தனித்தன்மையை பாதுகாக்கவும், சமூகத்தில் ஒரு அந்தஸ்து வழங்கித் தருவதற்காக இக்கட்டளை இடப்பட்டுள்ளது.

இத்துடன் நான் அஹ்மதி பெண்களிடமும் கூறுகிறேன். அவர்கள் ஏதாவது தாழ்வுமனப்பான்மையிலும் உணர்ந்தால், அல்லது உலகத்தின் பேச்சைக் கேட்டு பதறிப்போய் அல்லது Fashion என்ற மாயையில் மூழ்கி தமது பர்தாவை அகற்றி விட்டால் பிறகு உங்களின் கண்ணியத்திற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. அவர்களின் கண்ணியம் மார்க்க கண்ணியத்துடன் இணைந்துள்ளது. நான் முன்னரும் ஒருமுறை ஒரு சம்பவத்தைக் கூறியிருந்தேன். பல சம்பவங்கள் உள்ளன.

ஓர் அஹ்மதி இளம் பெண்ணுக்கு அவரது அலுவலகத்தில் நீங்கள் இனி பர்தா அணிந்து வந்தால் வேலையை விட்டு விலக்கப்படுவீர்கள் என்று கூறப்பட்டது. இதற்கு ஒரு மாதம் அவகாசம் வழங்கப்பட்டது. அந்த பெண் துஆ செய்தார். அல்லாஹ்வே! நான் உனது கட்டளைக்கேற்பவே பர்தா அணிகிறேன். உனது மார்க்கத்தின்படி அமல் செய்தவாறு பர்தா அணிகிறேன். நீயே வழிகாட்ட வேண்டும். இந்த வேலை போய் விட்டாலும் சரி எனக்கு நீயே வேறு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று துஆ செய்தார். ஒரு மாதம் வரை அதிகாரி அந்த பெண்ணை கஷ்டப்படுத்திக் கொண்டிருந்தார். இன்னும் சில நாட்களில் உன்னை பணிநீக்கம் செய்து விடுவோம் என்று கூறி மிரட்டி வந்தனர். கடைசியில் அந்தப் பெண் அந்த வேலையில் தான் நீடித்தார். அந்த அதிகாரியை அவரது மேலதிகாரி ஏதோ ஒரு தவற்றின் காரணமாக வேலையை விட்டு நீக்கி விட்டார். அல்லது வேறு இடத்திற்கு மாற்றலாகி விட்டார். ஆகவே நிய்யத் நன்றாக இருந்தால் இறைவன் சூழ்நிலைகளை சாதகமாக உருவாக்கி விடுவான்.

இறைவனுடன் தொடர்பு இருந்தால் அல்லாஹ் வழியை ஏற்படுத்துவதை பார்த்து மனிதன் வியந்து போகிறான். நம்மை அறியாமல் ஹம்தின் வார்த்தைகள் நமது நாவிலிருந்து வெளிவருகின்றன.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பைஅத்தின் 9 வது நிபந்தனையில் கூறியுள்ளார்கள். இறை படைப்பினங்களின் மீது பரிவு காட்டுதல், நன்மை செய்தல் என்று எழுதியுள்ளார்கள். இதுவும் உண்மையான முறையில் ஏற்படுவதற்கு உண்மையான பரிவுடன் உலகை இறைவனுக்கு அருகில் எடுத்துவர முயற்சி செய்யுங்கள். உலகினருக்கு முழுமைப்படுத்தப்பட்ட மார்க்கத்தை பற்றி கூறுங்கள். இது ஏற்படுவதற்கு தூதுச் செய்தியை கொண்டு செல்பவர் அதன்படி செயல்படுத்தி காட்ட வேண்டும். ஒரு வேதனையுடன் சுற்றுப்புறத்தில் நமது தூதுச் செய்தியை எடுத்து வைக்க முயற்சி செய்வீர்கள்.

பைஅத்தின் கடைசி நிபந்தனையல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னுடன் தொடர்பு, எனக்கு கட்டுப்படுதல் உலகின் எல்லா உறவுகளை விடவும் உயர்ந்ததாக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். நமது உறவுகள் நமது தொடர்புகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு தடையாக இல்லையே? என்று பார்க்க வேண்டும். இந்த தகுதியை நாம் அடைந்துள்ளோமா என்று பார்ப்பதற்கு நாம் இஸ்லாத்தின் போதனைகளை முழுமையாக நமது கழுத்தில் மாட்டிக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமக்குப் பிறகு இரண்டாவது வல்லமை தோன்றுவது குறித்து நற்செய்தி வழங்கியுள்ளார்கள். அது நிரந்தரமானது. அந்த இரண்டாவது வல்லமையாகிய கிலாஃபத்துடன் விசுவாசமான தொடர்பு கொள்ள வேண்டும். ஒருவர் இந்த உண்மையான தொடர்பை நிலைநாட்ட உறுதி எடுக்கும் போது அன்னாரின் ஜமாஅத்தில் உண்மையான முறையில் சேர்ந்தவராவார். அதுவன்றி அஹ்மதிய்யத் என்பது வெறும் Label தான் இருக்கும். அஹ்மதிகள் முன்வந்து இந்த அருளைப் பெற வேண்டும். உங்கள் மூதாதையர்கள் தியாகம் செய்து அஹ்மதிய்யத்தின் ஊற்றை தமது வீட்டில் பொங்கச் செய்தனர். அதிலிருந்து விலக்கப்பட்டு பின்னால் வந்த அஹ்மதிகள் உங்களை முந்தி விட வேண்டாம். அதிகமாக துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நிச்சயமாக தெரிந்து கொள்ளுங்கள். விலை உயர்ந்த துணிகளை அணிந்து செல்வந்தர்களாக இருப்பதால் மட்டும் அல்லாஹ்வின் அன்பை பெற்று விட இயலாது. மாறாக மார்க்கத்திற்கு உலகத்தை விட முன்னுரிமை வழங்குபவர்களே இறைவனிடம் அன்புக்குரியவர்கள் ஆவர். அல்லாஹ்வுக்காகவே அவர்கள் ஆகிவிடுகின்றனர். ஆகவே நீங்கள் இதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். (நாம் முன் சொன்ன செல்வந்தவர்களாகிய) அவர்கள் விஷயத்தின் பக்கம் அல்ல.

**எவர்கள் உம்மை ஏற்றுக் கொண்டார்களோ அவர்களை உம்மை மறுத்தவர்கள் மீது கியாமத் வரை மேலோங்கச் செய்வேன்** என்ற இந்த இல்ஹாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களக்கு இரண்டு மூன்று முறை இறங்கியது. இது திருக்குர்ஆனின் வசனமும் ஆகும். 1883 –ல் முதன்முறையாக இந்த இல்ஹாம் இறங்கிய போது ஜமாஅத்தின் அடிக்கல் நாட்டப்படவே இல்லை.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: என்னை பின்பற்றுபவர்களுக்கு என்னை மறுப்பவர்களின் மீது இறைவன் ஆதிக்கத்தை தருவான் என்பது உண்மை. ஆனால் என்னை பின்பற்றுபவர்கள் ஒவ்வொருவரும், தமக்குள் பின்பற்றுவதின் முழு தகுதியை கொண்டு வராத வரை என்னிடம் என் கையில் பைஅத் செய்தவர்களுள் சேர முடியாது. கட்டுப்படுதலில் தம்மை மாய்த்துக் கொள்ளக் கூடிய பின்பற்றுதல் தேவை. அதுவரை பின்பற்றுதல் என்ற சொல் அவரிடம் உண்மையாகாது.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இதிலிருந்து தெரிய வருவது அல்லாஹ் எனக்காக ஒரு ஜமாஅத்தை ஏற்பாடு செய்துள்ளான். அவர்கள் என்னை பின்பற்றுவதில் முற்றிலும் தம்மை மாய்த்து விடுவர். முழுமையான முறையில் என்னை பின்பற்றுவார்கள். இது முக்கியமான விஷயமாகும். இதன் பக்கம் நான்

கவனமூட்டுகிறேன். நீங்கள் இறைவனுடன் உண்மையான தொடர்பை ஏற்படுத்துங்கள். அவனுக்கே முதன்மை வழங்குங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய ஜமாஅத்தின் முன்மாதிரியாக உங்களை கருதுங்கள். அன்னாரின் அடியொற்றி செல்லுங்கள்.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் வைத்துள்ள எதிர்பார்ப்புகள் ஆகும். நாம் உண்மையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்த விரும்பினால் நாம் அவர்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். உண்மையான பின்பற்றுபவராவதற்கு உங்களை நீங்களே ஆய்வு செய்ய வேண்டும். முதியவர்கள் பெண்கள் இளைஞர்கள் ஆகிய அனைவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். பெற்றோர்கள் தமது வீட்டை கண்காணிக்க வேண்டும். குழந்தைகளின் உட்கார்தல் எழுதல் ஆகிய ஒவ்வொரு செயல்களையும் கண்காணிக்க வேண்டும். அன்புடன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனைகளை அறிவுறுத்துங்கள். தாய்மார்களின் வேலையும் தந்தையின் வேலையும் இதுதான். அஹ்மதி முஸ்லிமுக்கும் அஹ்மதியல்லா முஸ்லிமுக்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை காட்ட வேண்டும். முதலிலும் கூட நான் கூறினேன்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்ன வித்தியாசம் தெரிய வேண்டும். தெளிவான வித்தியாசம் நம்மிடத்தில் ஜமாஅத் அமைப்புக்குள் இருப்பதை தவிர வேறு எதுவும் இல்லை. அதேபோன்று அமலிலும் தெளிவாக வித்தியாசம் தெரிய வேண்டும். அதேபோன்று ஜமாஅத் அமைப்பு, கிளை அமைப்புகள் தத்தமது வட்டத்தில் ஆக்கப்பூர்வமான தர்பிய்யத் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய வேண்டும். வெறும் செல்வம், உலகப் பகட்டுகளைப் பெறுவதில் வாழ்வைக் கழிப்பது இறை நிஃமத்துகளை மறுப்பதாகும். நன்றி கேடாகும். நமக்கு இறைவன் தந்த பெரிய நிஃமத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களின் பைஅத்தில் வந்ததேயாகும்.

அல்லாஹ் ஒவ்வெரு அஹ்மதிக்கும் உண்மையான அஹ்மதியாகும் தவ்ஃபீக் வழங்குவானாக. நாம் எப்போதும் அவனது அருளிலிருந்து பங்கு பெற்று வருவோமாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT SWITZERLAND MOSQUE,
ON 23.04.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN
Reviewed by : Moulvi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456